## கூடுதல் சார்பு நீதிமன்றம் , கிருஷ்ணகிரி

**Start Time: 11.43AM**

| அ.வ.எண் | 180/2024 | வ.சா. | 7 |
|---|---|---|---|
| பெயர் | சக்தி | வயது | (2026) |
| த/பெ | சின்ன குழந்தை | மாவட்டம் | கிருஷ்ணகிரி |
| தொழில் | தாசில்தார் | ஊர் | கிருஷ்ணகிரி |

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி **29.07.2026** நாளாகிய இன்று திரு.எம்.ஆறுமுகம், கிரேடு II பென்ச் கிளார்க் கூடுதல் சார்பு நீதிமன்றம் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு நீதிபதி திரு.செ.சுரேஷ் குமார்,எம்.எஸ்.சி,எம்.எ,எம்.எல்., அவர்கள் முன்னிலையில் சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதன்மை விசாரணை:-**

5. நான் தற்போது பர்கூர் தாசில்தாராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதன் பெயரில் சாட்சியம் அளிக்க ஆஜர் ஆகி உள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.145/2B சம்பந்தமான 1985 முதல் 1995 வரை உள்ள அடங்கல் பதிவேடு ஆஜர் படுத்தி உள்ளேன். 1994 வருட அடங்கல் ஆஜர் படுத்தவில்லை. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இதிலிருந்து பர்கூர் அலுவலகம் பிரிக்கப்பட்ட 1994ஆம் வருடத்திற்குரிய பதிவேடு பர்கூர் தாசில்தார் அலுவலர் இல்லை. **1985 வருடம் 1995 வரை உள்ள அடங்கல் பதிவேடு** நகல் 1994 வருடத்தை தவிர உள்ள அடங்கல் பதிவேடு வாதி தரப்பு சான்றாவணம் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

2. நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் பதிவேடு நோட்டு சர்வே எண் **145/2** இடத்திற்கான பதிவேடு என்று சொன்னால் சரிதான். மேற்படி சர்வே எண்.145/2B என்று 1995-ல் பிரிவு ஏற்பட்டது. இந்த இடம் 1995 வருடத்திற்கு முன்னர் அரசு புறம்போக்கு நிலமாக இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான்.
6. 1985 முதல் 1995 வரை உள்ள அடங்கல் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள நபர்கள் அரசு நிலத்தை தன் சுவாதீனம் வைத்திருந்தால் ஆக்கிரமிப்பாளர்கள் என்றுதான் கருத இயலும் என்றால் சரிதான். அவர்கள் சுவாதீனம் இருந்ததற்கு

அத்தாட்சியாக தண்ட தீர்வை வழங்கப்படும், ஒவ்வொரு புறம்போக்கு நிலத்தை தன்வசம் வைத்துள்ளவர்கள் பெயரில் தண்ட தீர்வை ரசீது வழங்குவது வழக்கம்.

7. ஒருவர் பெயரில் தண்டத் தீர்வை ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக அரசு நிலம் அவர்களுக்கு சொந்தம் என்று எடுத்துக்கொள்ள இயலாது என்றால் சரிதான். தண்ட தீர்வை ரசீதின் அடிப்படையில் அரசு நிலத்தை தன் வசம் வைத்துள்ளார்கள் அந்த இடத்தை வேறு யாருக்கும் கிரயம் கொடுக்க முடியாது என்று சொன்னால் சரிதான்.
8. 2-ம் பிரதிவாதி ராணி பெயரில் 1995 ஆம் வருடத்திற்கு பின்னர் பட்டா வழங்கப்பட்டுள்ளதால் அவர் அந்த இடத்திற்கு உரிமையானவர் என்று எடுத்துக்கொள்ள இயலும் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது**

**End Time: 11.56 AM**

*Taken down by me in Open Court and Interpreted and read over to the Witness and acknowledged by him to be correct.*

SURESHKUMAR CHELLAM Digitally signed by SURESHKUMAR CHELLAM

***Additional Subordinate Judge,***

***Krishnagiri.***